**மே - 30**

**"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரத்திலே பொறுமையாயிருங்கள்."**

**- ரோம 12 : 12**

இங்கே கிறிஸ்துவினுடைய ஜீவியத்தின் பெரியப்போரின் ஒரு முக்கியமான பாகம் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் பழைய சுபாவத்தின் இயற்கையான போக்குகளோடு போராடவும், பெரிய இரட்சிப்பின் அதிபதியின் பலத்தில் வெற்றியை நம்பிக்கையோடு எதிர்பார்க்கவும் வேண்டும் செல்வ வாழ்வின் முகஸ்துதியான, ஏமாற்றக்கூடிய வசீகரச் சக்திகளுக்கு அவன் இணங்கக் கூடாது. தீங்கு, இக்கட்டு, இடுக்கம் முதலியவைகளின் பாரத்தினால் சோர்ந்து போகவும் கூடாது. ஜீவியத்தின் சோதனைகள் தன்னை எளிதில் கோபமடையவும் துர்குணமுள்ளவனாகவோ, தன் குணத்தை கடினப்படுத்தவோ, தன்னை வருத்தந்ததோய்ந்தவனாகவோ அல்லது கடுகடுப்புள்ளவனாகவோ அல்லது கசந்து கொள்ளுகிறவனாகவோ அல்லது இரக்கமில்லாதவனாகவோ ஆக்க அனுமதிக்கக் கூடாது. உக்கிராணக்காரனாக அவனுடைய உண்மையை சோதிக்க கர்த்தருடைய பராமரிப்பு அவனுக்கு அளித்திருக்கிற உலக சம்பந்தமான நன்மையானவைகளின் மீது பெருமையோ அல்லது ஆடம்பரமோ, சுயநீதியோ வளரவும் போஷிக்கப்படவும் அனுமதிக்கக் கூடாது. **- Z ’95, 20 (R 1759).**

தேவனுடைய சாயலிலும் கிறிஸ்துவின் சாயலிலும் இருக்கிற நமது நம்பிக்கையையும், இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களிலும் வேலையிலும் பங்கு கொள்ளுகிறதின் நம்பிக்கையும். சந்தோஷப்படுவதற்குரிய ஒரு திடமான ஆதாரமாகும். நம்முடைய உபத்திரவங்கள் நமது நம்பிக்கையை நாம் அடைவதற்காக நம்மை ஆயத்தப்படுத்துகிற படிகளாக அமைகின்றன. நம்முடைய உபத்திரங்களை எண்ணும்போது நாம் தவறிப்போகாதவாறு, நமக்கு முன்வைத்திருக்கிற மகிமையான நம்பிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் சந்தோஷமான உறுதியுடன் விடாமுயற்சி செய்ய அவைகள் பொறுமையை அப்பியாசிக்கக் கேட்கின்றன. பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. அப்போது அந்த மகிமையான நம்பிக்கை நம்முடையதாகும். **- P '35, 62.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

பிலி 4:4; 1தெச 4:2,3,6,7; 5:16; லூக் 10:20; ரோம 15:3,4,13; 5:2-5; எபி 3:6;10:36; 1பேது 4:13; லூக் 21:19; சங் 37:7; 40:1; ஆப 3:17,18; கொலோ 1:11; யாக் 1:2-4; 5:7; 1பேது 2:19,20; எபி 12:1-3; 2தெச 1:4.

**கோபுர வாசிப்பு : Z ’11, 408 (R 4909)**

**வினாக்கள்:** இந்த வசனத்தின் வெளிச்சத்தில் இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?